13.03.2026

இ.தி.மு.மனு எண். 10 /2023

எ.ம.சா. 1 – கலைச்செல்வி

சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–

1) நீங்கள் எங்கு வசித்து வருகிறீர்கள் என்றால் என்னுடைய கனவர் வீட்டில். உங்களுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 27.10.2017 ல். திருமண காலத்தில் உங்கள் கனவர் ஆர்மியில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் பிஎஸ்சி பிஎட். உங்களுது திருமணம் பெரியவர்கள் பேசி முடித்த திருமணம் என்றால் சரிதான். திருமணம் ஆன நாள் முதல் இன்று வரை தொடந்து உங்கள் கனவர் வீட்டில்தான் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான்.

2) உங்கள் வீட்டில் நீங்கள் எத்தனை பேர்கள் என்றால் 3 பேர்கள். ஒரு சகோதரர் உண்டு என்றால் சரிதான். அவர் பெயர் என்ன செல்வக்குமார். அவர் என்ன செய்து வருகிறார் என்றால் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார் தற்போது ஊருக்கு வந்துள்ளார்.

3) உங்கள் சொந்த ஊர் ஆவரைக்குளம் என்றால் சரிதான். உங்கள் கனவர் ஊர் ஆரல்வாய்மொழி குமாரபுரம் என்றால் சரிதான். உங்கள் கனவர் வீட்டில் தற்போது யாரெல்லாம் இருக்கிறார்கள் என்றால் நான்மட்டும்தான் இருக்கிறேன். உங்கள் கனவரின் பேற்றோர் எங்கு இருக்கிறார்கள் என்றால் தெரியாது. உங்கள் கனவருக்கு ஒரு சகோதரி உண்டு என்றால் சரிதான். அவர் பெயர் என்ன என்றும் எங்கு பணிபுரிகிறார் என்றால் அவர் பெயர் சோபியா எங்கு வேலை பார்க்கிறார் என்று தெரியாது.

4) உங்கள் கனவர் தற்போது எங்கு பணியாற்றுகிறார் என்றால் தெரியாது. நீங்களும் உங்கள் கனவரும் பிரிந்து எவ்வளவு நாள் ஆகிறது என்றால் நவம்பர் 2018 ல் இருந்து பிரிந்து இருக்கிறோம். உங்கள் திருமண சமயம் உங்கள் கனவர்

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.13 13:07:33 +0530

எவ்வளவு நாள் விடுப்பில் இருந்தார் என்றால் 15 நாட்கள். திருமண சமயத்தில் அவர் எங்கு பணிபுரிந்தார் என்றால் ஒடிசாவில். திருமணம் செய்வதற்கு முன்பாக உங்கள் கனவர் என்ன படித்திருந்தார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) உங்கள் கனவர் 10 ம் வகுப்பு மட்டும் படித்திருந்தார் என கூறி திருமணத்திற்கு முந்தைய நாள் நீங்கள் திருமணம் வேண்டாம் என சொன்னீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கனவர் என்ன படித்திருக்கிறார் என்ற விவரம் எப்போது உங்களுக்கு தெரியவந்தது என்றால் இது வரை தெரியாது.

6) உங்கள் கனவர் தாக்கல் செய்த மனுவினை படித்துப் பார்த்துள்ளீர்களா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியும் என்றால் இல்லை. நீங்கள் உங்கள் மனுவில் அவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என கோரி எதிரிடை கோரிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

7) இந்த வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பாக உங்கள் கனவர்மீதும் அவர் அம்மா, அவர் சகோதரி மீதும் வள்ளியுர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் DVC 31/2018 வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கின் உத்தரவின் அடிப்படையில்தான் நீங்கள் உங்கள் கனவர் வீட்டில் குடியிருந்து வருகிறீர்கள் என்றால சரிதான். அந்த வழக்கு உத்தரவுப்படி உங்கள் கனவர் உங்களுக்கு ஜுவனாம்சம் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு நடத்துவதற்கும் இடைக்காலம் ஜுவனாம்சம் உங்கள் கனவரிடமிருந்து பெற்றுவருகிறீர் என்றால் சரிதான். இதுவரை எவ்வளவு ஜுவனாம்சம் தொகை வாங்கியிருப்பீர்கள் என்றால் எவ்வளவு மொத்தமாக கொடுத்துள்ளார் என்று கணக்கு பார்க்கவில்லை ஆனால் இன்னும் ரூ. 35,000/– கொடுக்க வேண்டும்.

8) உங்கள் திருமணத்தின் பயனாக குழந்தைகள் உள்ளார்களா என்றால் இல்லை. உங்கள் அப்பா என்னவேலை செய்கிறார் என்றால் விவசாயம். உங்கள் திருமணம் முடிந்து வேலைக்கு சென்ற பிறகு உங்கள் கனவர் மீண்டும்

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.13 13:07:40 +0530

எப்போது வந்தார் என்றால் 01.03.2018 ல். அவர் நேராக உங்களைதான் பார்க்க வந்தார் என்றால சரியல்ல. வேலைக்கு சென்ற பிறகு உங்களிடம் கைப்பேசியில் அவர் பேசினார் என்றால் சரியல்ல என்னிடம் கைபேசி இல்லை அவர் அம்மா கைப்பேசி மூலமாகதான் பேசுவார். அந்த கைப்பேசி அவர் உங்களிடம் கொடுத்து உங்கள்கனவரிடம் பேசியதில்லை என்றால் சரியல்ல.

9) திருமண காலத்தின் உங்கள் கனவர் பெற்றோர், சகோதரி ஆகியோர்கள் ஒரே வீட்டிலதான் இருந்தார்கள் எற்◌ால சரிதான். திருமணம் முடிந்த உங்கள் இருவருக்கும் சுமூகமான உறவு இல்லை என்றால சரியல்ல. சுமூகமான உறவு இல்லாதபோது அவரை நீங்கள் கருப்பன், தடியன் , முரடன், படிக்காதவன் என கூறி சண்டையிட்டு வந்தீர்கள் என்றால சரியல்ல.

10) நீங்கள் தற்போது குடியிருந்து வரும் கனவரின் வீட்டிலுந்து அவரது பெற்றோர் எப்போது சென்றார்கள் என்றால் அகு எனக்கு தெரியாது. நீங்கள் மனுதாரருடன் சுமூகமான உறவு இல்லாதபோது அவரது பெற்றோர் திருமணம் முடிந்தவுடன் உங்களுக்கு அறிவுரை எடுத்துக் கூறினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு அறிவுரை கூறியதால்தான் அவர் பெற்றோர்களை நீங்கள் அடித்து வெளியே விரட்டினீர்கள் என்றால சரியல்ல. அதனால்தன் நீங்கள் அவர்கள் வெளியே எப்போது போனார்கள் என விவரம் தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறீர்கள் எனறால் சரியல்ல.

11) உங்கள் கனவரின் சகோதரி திருமண காலத்தில் எந்த காவல் நிலையத்தில் பணியாற்றி வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் கனவரின் சகோதரியின் கனவர் பெயர் தெரியுமா என்றால் ரகுநாதன். ரகுநாதன் என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் தெரியாது. அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் இருக்கிறாகள் என்றால் 2 குழந்தைகள்.

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.13 13:07:45 +0530

12) இந்த வழக்கில் நீங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எவ்வளவு காலம் இருக்கும் என்றால் 2023ம் ஆண்டுதாக்கல் செய்தேன். உங்கள் கனவரோடு ஆரல்வாய்மொழியை சேர்ந்த பாலக்குமார் மகன் கார்த்திக் என்பவர் பணிபுரிந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13) திருமணம் நடைபெற்ற காலம்முதல் உங்கள் கனவர் உங்களைவிட குறைவாக படித்திருக்கிறார் என்ற காரணத்திற்கான அவருடன் இல்லறவு உறவு வைக்காமல் இருந்தீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் இன்று வரை ஆரல்வாய்மொழி குமாரபுரத்தில் உள்ள மனுதாரர் வீட்டில்தான் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி முகவரியை மறைத்து சொல்லியுள்ளிகள் என்றால் சரியல்ல ஆதார்கார்டு முகவரியை கூறியுள்ளேன்.

14) உங்கள் கனவர் வேலைக்கு சென்று திரும்ப வந்தபோது வீட்டில் நீங்களும் சீலாததிக்குளத்தை சேர்ந்த பிரகாஷ் என்பவரும் இருந்தீர்கள் என்றால் சரியல்ல. நீங்களும் பிரகாஷ் என்பவரும் மனுதாரரின கட்டிலில் ஒன்றாக படுத்திருந்தீர்கள் என்றால் சரியல்ல. அப்போது உங்கள் கனவர் கேட்டதற்கு நீங்களும் உங்கள் தந்தையும் வீட்டாரும் சேர்ந்து வீட்டு வாசலில் வைத்து அவரை ஆபாசமாக ஏசினீர்கள் என்றும் ஆனால் அவர் மருந்து குடித்து தற்கொலை செய்ய முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக அவர் சிகிச்சை பெற்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் சிகிச்சை பெற்போது நீங்களும் உங்கள் வீட்டு நபர்களோ செல்லவில்லை என்றால சரியல்ல நான அவருடன்தான் இருந்தேன். இது சம்பந்தமாக ஆரல்வாய்மொழி காவல்நிலையத்தில் உங்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

15) சிகிச்சைக்கு பிறகு அவர் மீண்டும் கைதராபாத்தில் உள்ள ராணுவ மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்தார் என்றார் சரியல்ல. ஆரல்வாய்மொழி காவல்நிலையத்தில் விசாரணை செய்யும்போது எந்த மருத்துவமனையில்

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.13 13:07:49 +0530

சிகிச்சை பெற்றார் என்றால நாகர்கோவல் உள்ள கணேசமணி மருத்துவனை. அவர் சிகிச்சை முடித்து வேலைக்கு சென்றபோது நீங்கள் துணைக்கு சென்றீர்களா என்றால இல்லை.

16) உங்கள் கனவரின் தந்தைக்கு விபத்தில் வலது கால் எலும்பு முறிந்துவிட்டது என்றால் தெரியாது. இந்த வழக்கில் பிராதை படித்துப் பார்த்து அதன் பிறகாவது சென்று அவரை பார்த்தீர்களா என்றால் இல்லை. உங்கள் கனவர் மருத்துவமனையில் இருந்தபோது நீங்கள் உங்கள் நகைகள், துணிமணிகள் உடைமைகளை எடுத்துக்கொண்டு உங்கள் பெற்றோர் வீட்டிட்றகு சென்றுவிட்டீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கனவர் மருந்து குடித்து சிகிச்சையில் இருந்த சமயம் நீங்கள் தப்பிக்க வேண்டி உடன் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

17) DV வழக்கு எப்போது முடிவுக்கு வந்தது என்றால 2021ல். அந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் உங்கள் கனவர் பணியில் இருந்தார் என்றால் தெரியாது. உங்களுக்கு உங்கள் கனவர் பற்றியோ, அவரது பெற்றோர் பற்றியோ திருமண சமயம் விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். நீங்கள் உங்கள் கனவர் அந்த வழக்கின் உத்தரவுப்படி வழங்கும் ஜுவனாம்சம் தொகை பெற்றுவருகிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் நிரூபணவாக்கு மூலத்தில் எந்த தொகையும் பெறவில்லை என பொய்யாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் திருமணம் ஆகி வந்த பிறகுதான்மனுதாரர் குடும்பத்தார் உங்கள் கொடுமை தாங்காமல் பிரிந்து பல்வேறு இடங்களுக்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல.

18) DV வழக்கில் எதிர்மனுதாரர் ஆஜராக வரும்போது உங்கள் தந்தைக்கு வேண்டியவர்களை வைத்து உங்களை கனவரை ஆஜராகவிடாமல் தடுத்தீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் கனவரின் உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பி வந்தீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் புகார் அனுப்பி பணிசெய்யவிடாமல் தடுத்தும், பதவு உயர்வை தடுத்தும் வந்தீர்கள் என்றால் சரியல்ல. உங்கள்

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.13 13:07:54 +0530

பெற்றோருடன் சேர்ந்து மனுதாரரை கொடுமை செய்து வந்தீர்கள் என்றால் சரியல்ல.

19) உங்கள் கனவரை அவர் வேலை செய்யும் இடத்தில் உங்களை நாமினியாக சேர்க்க சொல்லி வற்புறுத்தினீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கனவரை பிடிக்காமல் உங்கள் சகோதரர் மூலம் திருமணத்திற்கு முதல் நாள் திருமணத்தை நிறுத்த முயற்சி செய்தீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கடந்த 8 வருட காலமாக மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருவதால் உங்களுக்கு நடந்த திருமணம் ரத்து செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

20) நீங்கள் மனுதாரரின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக அந்த வீட்டில இருந்துகொண்டு மனுதாரரையும் அவரது குடும்பத்தாரையும் பொருட்களை எடுக்கவிடாமல் தடுத்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கனவரின் பெற்றோர்களையும் சகோதரியையும் ஆபாசமாக பேசி துன்புறுத்தினீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் குடும்ப பெரியோர்கள் மூலமாக சேர்ந்து வாழ சமாதான பேச்சு நடத்தினீர்களா என்றால் இல்லை. உங்களுக்கு உங்கள் கனவருடன் எந்த காலத்திலும் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்பதால்தான் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றால் சரியல்ல.

21) நீங்கள் உங்கள் கனவரிடமிருந்த சொத்து மற்றும் பொருள்உதவி பேறவேண்டும் என்பதற்காக மனுதாரரோடு சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக குறிப்பிட்டு எதிரிடை கோரிக்கை மனுவை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கேட்டுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றும் மனுதாரரின் மனு அனுமதிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

22) நீங்கள் நாகர்கோவில் அனைத்து காவல்நிலையத்தில் ஜுலை 2018 ல் புகார் கொடுத்திருந்தீர்கள் என்றால சரியல்ல. அந்த காவந்நிலையத்தில உங்களை விசாரணை எதுவும் செய்தார்களா என்றால் இல்லை உங்கள் கனவர் மீது வேறு எங்காவது புகார் கொடுத்திருந்தீர்களாள ன்றால இல்லை. உங்களுக்கும் உங்கள் கனவருக்கும் இடையில் உடல் ரீதியாக நாளது தேதி

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.13 13:07:59 +0530

வரை எந்த உறவும் ஏற்படவில்லை என்றும் அதனால் திருமண பந்தத்தின் ஆணிவேறான உடலுறவு ஏற்படவில்லை என்பதாலும் உங்கள் இருவருக்கும் நடைபெற்ற திருமணம் முழுமை அடையவில்லை என்றால் சரியல்ல.

23) மனுதாரர் விடுப்பில் இருந்த 15 நாட்களும் அவர் உங்களை தொடாதவாறு பார்த்துக்கொண்டீர்கள் எனறால் சரியல்ல. திருமணம் முடிந்தவுடன் மனுதாரரை பிரிந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்ததால் தான் என்றுமே அவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பான சங்கதிகளை குறிப்பிட்டு எதிரிடைகோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.03.13 13:08:02 +0530